நகல்



ஞாயிறு.

கலாநிலயம்

யாழ்ப்பாணம்.

21-2-33

அருமை பெருமையிற் சிறந்த
பிரமஸ்ரீ சுவாமி அவர்களுக்கு

யாழ்ப்பாணத்தின் கண்ணேயே நான் பத்து ஆண்டுகளாக வதிகின்றேன். தங்களை நான் 1925 இல் சிதம்பரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் கண்டு மகிழ்வுற்றபின்னர் நான் இந்தியாவிற்கு வந்திலேன்

இங்கு நிறுவப்பட்டுள்ள கலாநிலயத்தில் தங்களது அரும்பதிப்புக்களாகிய நூல்களெல்லாந் தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலயத்தின் முதலாமாண்டு அறிக்கையும் இதன் அங்கமாக இனி வெளிப்பட இருக்கும் "ஞாயிறு" என்னும் பத்திரிகையின் நோக்கவிளம்பரமும் இதனுடன் தனி உறையில் தங்களுக்கு அனுப்பப்படுகின்றன.
தென் இந்தியத் தமிழ்நாட்டு அறிவுடையார்க்கும் இந்நாட்டு அறிஞர்க்கும் நாளும் வளர்ந்து பலவாகிய ஒரு தொடர்பையுண்டாக்கி இங்கு இக்குன்றாத நாகரிக முறையில் நந்தமிழைச் சாலவும் வளர்த்தல் வேண்டுமென்பதும் இந்தியாவின் பிறகலைகளையும் இங்குப் பெரிதும் பரவச்செய்தல் வேண்டுமென்பதுமே 'கலாநிலயக் கழகத்தினதும் இதன் அங்கமாக வெளிவர நிற்கும் "ஞாயிறு" என்னும் பத்திரிகையினதும் உட்கிடைகளாகும்.

தென் இந்தியத் தமிழ்நாட்டில் தமிழ்ஞாயிறாய் கலாதிலகமாய் விளங்கி நூலாராய்ச்சியாளர்க்கும் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கும் நல்வழிகளை நன்குகாட்டிய பெரியோராகிய தங்களுடைய அன்பார்ந்த வாழ்த்துரையொன்று "ஞாயிறு" என்னும் இதழின் முதற்கதிருக்கு இன்றியமையாததென்று நானும் இதழ் ஆசிரியக் கழகத்து ஏனைய அறிஞர்களும் தமிழறிவுடையார் பிறரும் பெரிதும் அவாவுகின்றோம். தங்களது அவ்வாழ்த்து இங்குள்ள தமிழ்மக்களை மேலும் மேலும் தமிழ்மொழியை வளர்த்துப் பாதுகாத்தலில் மிகமிக ஊக்கி

நகல்

21-2-55

[illegible]

374 - 376.
த.க. VOL 'C'

நகல்

யருளுமென்பது. திண்ணமாகும்.

இம்முதற் பகுதியினுக்கு வேண்டிய கட்டுரைகள் முதலியன வருகிற மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் அச்சுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றமையாலும் தங்களுடைய வாழ்த்துரைக்கு முதலில் தக்க இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றமையாலும் தாங்கள் அன்பு கூர்ந்து அவ்வாழ்த்துரையை ஒருவாரத்திற்குள் எழுதியனுப்புமாறு தங்களைப் பெரிதும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
தங்களுடைத்து ~~அன்புள்ள~~ மிக்க
அன்பும் நன்றியும் உடைய
உ— தெத்திரலோசீசுவரன்

மஹாமஹோபாத்தியாய
பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள்
திருவட்டீசுவரன் பேட்டை
சென்னை

நகல்

21-2-33

"ஞாயிறு"
திருவமைச்சன்

சுவாமி. உருத்திரகோடீச்சுவரர்

Copied in
த.க. VOL 'C'
374-376.

42